# பன்னோக்குப் பார்வையில்
# தமிழ்மொழியும் இலக்கியமும்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

**தொகுதி - III**


பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் மா. சிதம்பரம்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் சு. இராமலிங்கம்**
**முனைவர் சந்திரிகா**
**முனைவர் த. பிரியா**



**தமிழ்த்துறை**

**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**

**(தன்னாட்சி)**

தேசிய மதிப்பீடு, மீள் தர நிர்ணயக் குழுவின் 'A' தகுதி பெற்றது
தனிச்சிறப்புத் திறன் கல்லூரித் தகுதி பெற்றது

**ஞானாம்பிகை நூற்பாலை (அஞ்சல்), கோயம்புத்தூர் – 641 029**

**போன் : 0422 – 2642095**

E-mail : info@kongunaducollege.ac.in Website : www.kongunaducollege.ac.in

# பன்னோக்குப் பார்வையில் தமிழ்மொழியும் இலக்கியமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள் : முனைவர் க. முருகேசன்
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் சு. குமரன்
முனைவர் சு. இராமலிங்கம்
முனைவர் சந்திரிகா
முனைவர் த. பிரியா

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : ஜூலை, 2019

வெளியீடு : தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 9843273994,7092092066

பக்கங்கள் : XXII + 410 = 432

விலை : உரூ. 400/-

ISBN : 978 - 93 - 80800 - 57 - 8


# International Conference on Heterogeneous Perspectives in Tamil Language and Literature


Editor's : Dr. K. Murugesan. Dr. M. Chidambaram
Dr. S. Kumaran. Dr. S. Ramalingam.
Dr. Chandrika. Dr. D. Priya

Copyright's : Editors

First Edition : July, 2019

Published : Department of Tamil
Kongunadu Arts and Science College
Coimbatore - 641 029.

Computer : Prdag Print, Coimbatore - 29.

Printing at : Prdag Print
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 9843273994, 7092092066

Pages : XXII + 410 = 432

Prize : Rs. 400/-

# 230. திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் தொன்மம் : நான்காம் திருமுறையை அடிப்படையாகக் கொண்டது

**சி. ரமணராஜா**
*விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*இலங்கை.*

## அறிமுகம்

தொன்மங்கள் (myths) செய்தியினை எடுத்துச் சொல்வதில் பிரதான இடத்தைப் பெறுகின்றன. புலன்கடந்த பொருளியலுண்மைகள், சமய உண்மைகள் என்பவற்றை வெளிப்படுத்துவதில் தொன்மக் கூறுகள் உதவவல்லன என்பதனை சமய வரலாற்றாய்வாளர்களும் உளவியலறிஞர்களும் ஒப்புக் கொள்கின்றனர். ஒரு செய்தியினை எடுத்துக் கூறி ஒருவரை நெறிப்படுத்தவும் வழிகாட்டவும் ஆலோசனை வழங்கவும் தொன்மங்களால் இயலும்.

சைவ நாயன்மார்களுள் சமண சமயம் சார்ந்து மீண்டும் சைவராகி சைவத்தின் இருப்புக்காக பக்தி இயக்கத்தளத்தில் நின்று பணியாற்றியவரில் திருநாவுக்கரசு நாயனார் குறிப்பிடத்தக்கவர். இவரது பாடல்கள் சைவத் திருமுறையில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறையாக உள்ளடக்கப் பட்டுள்ளன. உருக்கமான உணர்ச்சியவயப்பட்ட இறை பக்தியின் மூலம் இறைவனையே அடைய முடியும் என்பதனை அனுபவ நிலையில் வெளிப்படுத்தியவர்களில் இவரும் குறிப்பிடத்தக்கவர். இவர் அங்கம் வகித்த பக்தி இயக்கம் வடமொழி இலக்கிய சிந்தனைகளைத் தமிழகத்துக்கு நுழைய வித்திட்டது. வடமொழி இலக்கியக் கருத்துக்களால் பக்தி இயக்கச் செல்நெறி தனித்துவ நிலையெய்தியது. வேதாகமங்கள், இதிகாச புராணங்கள் உள்ளிட்ட வடமொழி நூற்கருத்தியல்களை மக்கள் மத்தியில் எளிமையாக எடுத்துச் சென்றவர்கள் - சொன்னவர்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆவர். நாயன்மார்களுள் எண்பத்தொரு வயது வரை சரியைத் தொண்டின் மூலம் வாழ்ந்தவர் நாவுக்கரசர். இவர், மக்கள் மத்தியில் இறைவனின் இருப்பினை நிலைநிறுத்தும் முயற்சியில் இறை குறித்த தொன்மங்களை அதிகம் எடுத்தாண்டுள்ளார். இதனை சமயப்பிரசார உத்தியாகவே கருதவியலும். இப்பின்னணியிலேயே இவ்வாய்வு நிகழ்த்தப்படுகின்றது.

## ஆய்வின் நோக்கமும் முறையியலும்

சைவ நாயன்மார்களின் பக்தி இயக்கச் செயற்பாடுகள் தனித்துவம் வாய்ந்தவை. அத்தகைய செயற்பாடுகள் யாவும் சமயத்தின் மையவிடங்களான திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுள்ளன. பிற்காலங்களில் பக்தி என்பதனை கோட்பாட்டு நிலையில் நோக்குவதற்கான சூழலையும் இவ்வியக்கச் செயற்பாடுகளே தோற்றுவித்தன. சமய வரலாற்று நிகழ்வுகள் மற்றும் செய்திகளைப் பதிவு செய்வதானது பக்திக் கோட்பாட்டின் இருப்பிற்கும் உயிர்ப்பிற்கும் இன்றியமையாததாக அமையும். இதனடிப்படையில் இந்துசமயம் சார் தொன்மையான வரலாறுகள், நிகழ்வுகள் என்பவற்றை அறிவதற்கு நாவுக்கரசரின் பாடல்கள் துணைபுரிகின்றனவா? நாவுக்கரசர் ஏன் அதிகளவில் சிவனின் திருவிளையாடல்களைப் பதிவு செய்துள்ளார்? இவ்வுத்தி முறைமையினால் நாவுக்கரசர் செய்யவிளைந்தவை எவை? பக்திக் கோட்பாட்டுருவாக்கத்தில் மேற்படி உத்தி முறைமைகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளனவா? சிவசரிதம் மட்டும் தான் நாவுக்கரசர் வெளிப்படுத்திய தொன்மக் கூறுகளா? எனும் பல விடயங்களை ஆராய இக்கட்டுரை எத்தனம் செய்கின்றது. இதுவே இவ்வாய்வின் பிரதான இலக்குமாகும்.

முறையியல் வழி அமையும் தரவுகளே துல்லியத் தன்மையுடைய முடிவுகளைத் தரவல்லவை எனும்வகையில் இவ்வாய்வானது விளக்கமுறை ஆய்வு மற்றும் வரலாற்றியல் ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகின்றது. ஆய்வு சார்ந்த விடயங்கள் ஆய்வின் தேவை கருதி பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். பன்னிரு திருமுறைத் தொகுப்பினுள் நான்கு தொடக்கம் ஆறாம் திருமுறைகளில் நாவுக்கரசர் தேவாரங்கள் உள்ளடக்கப் பட்டிருப்பினும் இவ்வாய்வில் நான்காம் திருமுறை மற்றும் அதற்கான உரை விளக்கங்கள் என்பன முதனிலை மூலங்களாக அமையப்பெற்றுள்ளன. இத்திருமுறையில் இந்து சமுதாயப் பண்பாடு குறித்த சிந்தனைகள் உள்ளடக்கங்களாகக் காணப்படினும், தொன்மங்கள் பற்றிய சிந்தனைகளே ஆய்வுப்பரப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## நாவுக்கரசர் தேவாரங்களில் தொன்மம்

தொன்மங்கள், இலக்கியங்களில் கையாளப்பபட்டு வருவதனை சங்க இலக்கிய காலத்திலிருந்து உணரலாம். இதன் தொடருறு நிலையாக எழுந்து பிற்கால இலக்கியங்களிலும் தொன்மங்கள் பிரதான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இந்திய மொழியிலுள்ள இலக்கியங்களில் பெரும்பாலானவை இராமாயணம், மகாபாரதம் எனும் இதிகாசங்களின் தாக்கத்திற்கு உட்பட்டவை. அதுபோன்றே பௌராணிக மரபின் செல்வாக்கினையும் பிற்கால இலக்கியங்களில் காணவியலும். நாயன்மார்கள், ஆழ்வார்களின் பக்திப்பாடல்களில் தொன்மங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நாயன்மார்களின் பாடல்களில் சிவனின் திருவிளையாடல்கள் குறித்த கதைகளையும் ஆழ்வார் பாசுரங்களில்

திருமாலின் அவதாரங்கள் குறித்த கதைகளையும் பதிவுகளாகக் காணலாம்.

திருநாவுக்கரசர் கடவுளின் பரத்துவம் குறித்த கதைகளை வைதிக மரபுப் பின்னணியில் திருக்கோயில்களை மையப்படுத்தி எடுத்துரைத்திருக்கின்றார். இறைவனின் பரதத்துவச் செயல்களை வெளிப்படுத்தும் புராண இதிகாசக் கதைகள், திருக்கோயில்களின் தோற்றம் குறித்த தொல்பழங்கதைகள், நாட்டுப்புறக்கதைகள், சமயப்பெரியவர்களின் சரிதங்கள் மற்றும் களிவிரக்கத்துடன் கூடிய தன்வரலாற்றுக் கதைகள் என்பவற்றை தனது பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இத்தொன்மங்களை தலங்கள் தோறும் சென்று எடுத்துரைப்பதனூடாக தலப் பெருமைகளை எடுத்துக் கூறவும், மக்களை மடைமாற்றம் செய்யவும் அவரால் முடிந்தது. ஒருவகையில் கூறுவதாயின் பிற்கால பிரசங்க மரபு உள்ளிட்ட சமய பிரசார முறைமைகளுக்கும், உளவள ஆற்றுப்படுத்தலுக்கும் 'கதை' கூறும் யுக்தியை கையாள்வதற்கு நாவுக்கரசரின் மேற்குறித்த தொன்மக்கையாளுகை முன்னோடிச் சிந்தனைகளாக அமைந்து விளங்கியதெனக் கருதலாம். இந்நிலையில் திருநாவுக்கரசரின் தேவாரங்களில் புலப்படுகின்ற தொன்மங்களை,

- இறைபரத்துவத்தை வெளிப்படுத்தும் தொன்மங்கள்.
- நாயன்மார்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் தொன்மங்கள்.
- திருக்கோயில் உருவாக்கம் குறித்த தொல்பழங்கதைகள்.
- தன்வரலாறு குறித்த தொன்மங்கள்.

எனப்பகுத்து நோக்கலாம். நாவுக்கரசரிடம் ஒரு வளமான தொன்மக் கருவூலம் வசப்பட்டிருந்தமையினை உணரலாம். சிவசரிதம் கூறும் தொன்மங்களை நோக்கும் போது நாவுக்கரசரின் மூன்று திருமுறைகளும் குறிப்பிடத்தக்க வகையில் அவற்றை அதிகம் பதிவுசெய்துள்ளன. சிவனின் முதன்மை, சிவபரத்துவம், இருப்பு நிலை முதலானவற்றை நிறுவுவதனை நோக்கமாகக் கொண்டே தொன்மக் கையாளுகை இடம்பெற்றுள்ளது.

## இறைபரத்துவத்தை வெளிப்படுத்தும் தொன்மங்கள்

சிவனின் வீரத்தன்மையை, வல்லமையினைச் சுட்டியுணர்த்துகின்ற அட்டவீரச் செயல்கள் மற்றும் திருவிளையாடல்களைக் குறித்து நிற்பன இவ்வகைமையைச் சார்ந்தன. மெய்யியற் கொள்கைகளை விளக்க முற்படும் போது அவற்றுக்கு கதை வடிவம் கொடுப்பது வழக்கமாகும். கனமான செய்திகளை எளிமைப்படுத்தும் முயற்சியே இதுவெனலாம். காலப்போக்கில் இத்தகைய தொல்பழங்கதைகள் தமது உள்ளீடுகளை இழந்து வெறுமையாய் ஆகிவிடுகிறபோது அவற்றை காலத்திற்கேற்ப மீண்டும் எடுத்து விளக்கவும் பொருள்விளக்கம் செய்யவும் நேர்கிறது. அரசியல், பொருளாதார பங்களிப்புடன்

முன்னேற்றம் கண்ட புறச்சமயங்களின் மேலெழுச்சிச் சூழலில் நாவுக்கரசர் சிவபரத்துவம் குறித்த செய்திகளை, தொன்மக் கதைகளைத் தன் விருப்பப்படி மீளவும் நிலைநிறுத்தியுள்ளார்.

அட்ட வீரட்டம் என அறியப்படும் இச்செயல்கள் குறித்த கதைகளின் மூலங்கள் பௌராணிக இலக்கியங்களில் காணப்படுகின்றனவாயினும் அவை குறித்த பதிவுகளை நாவுக்கரசர் பாடல்களில் அதிகளவில் காணலாம். தமிழ் நாட்டுக் கோயில்களின் வரலாற்றில் அட்ட வீரச்செயல்கள் குறித்த தொன்மங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் அட்டவீரட்டம் குறித்த செய்திகள் ஏலவே மக்களால் அறியப்பட்டிருந்தன. ஆகையால் அவரது நோக்கம் கதை சொல்வதல்ல. அக்கதைகளை மீளவும் நினைவுபடுத்துதல் அல்லது இக்கதைகளின் வழி தனது செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்பதேயாகும். எனவே, தான் பதிவு செய்ய விழைந்த தொன்மக் கதைகளை மிகவும் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

சிவன் நிகழ்த்திய அட்டவீரட்டச் செயல்களாகத் திரிபுரங்களை எரித்தல், அந்தகாசுரனை அழித்தல், தக்கனின் செருக்கழித்தல், பிரமன் சிரம்கிள்ளல், சலந்தரனை அழித்தல், கயாசுரன் தோலுரித்தல், காமனை எரித்தல், காலனைக் காய்தல் என்பன கூறப்படுகின்றன.

விண்ணில் அமைந்த மூன்று கோட்டைகளை சிவன் தகனம் செய்த கதை மிகவும் புராதனமானது. கதைக்கு பல்வேறு வடிவங்களிருப்பதாயினும் மையக்கருத்து இதுதான். வலிமை மிக்கவர்களான தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி ஆகிய மூவசுரர்களும் பொன், வெள்ளி, இரும்பாலான கோட்டைகளை அமைத்து யாராலும் வெல்லமுடியாத வகையில் ஆற்றல் பொருந்தியவர்களாக விளங்கினர். அவ்வசுர ஆட்சியில் துன்பமே பயனாகியது. இதனால் மக்கள்,தேவர், நாகர் முதலியோரின் வேண்டுதலின்படி சிவன், மேருமலையை வில்லாகவும் வாசுகிப் பாம்பை நாணாகவும் நாராயணனை அம்பாகவும் நான்முகனை சாரதியாகவும் கொண்டு முக்கோட்டைகளை தகனம் செய்தார். இத்தொன்மக் கதையினை நாவுக்கரசர் அதிக இடங்களில் பதிவு செய்துள்ளார். இதுபோன்று மார்க்கண்டேயருக்காகச் சிவன் யமனை சங்கரித்தமை பற்றிய தொன்மங்களை பின்வருமாறு வெளிப்படுத்தியிருக்கின்றார். அதாவது, காலம் முடிந்துபோன மார்க்கண்டேயனைக் கொண்டு செல்வதற்காக அங்கே யமன் பாசக்கயிறு வீசவந்தான். இவ்வேளை மார்க்கண்டேயன் இறைவனின் இலிங்கத் திருவுருவைக் கட்டிக்கொள்ள அதிலிருந்து வெளிப்பட்ட இறைவன் காலனைக் காலால் உதைத்துக் காய்ந்து மார்க்கண்டேயனை இளவயதினனாகவே வாழவைத்தார். இத்தகைய தொன்மக் கதையினை பல்வேறு பதிகங்களிலும் குறித்துள்ளார். சிவவழிபாட்டினால் மரணமிலாப் பெருவாழ்வு அடையலாம் எனும் நம்பிக்கையினை இத்தொன்மக்கதை மூலம் விளக்க முற்பட்டுள்ளார்.

மேலும், யோகத்தில் ஆழ்ந்திருந்த சிவனின் மோனம் குலைக்கக் காமன் செய்யும் முயற்சியைக் கண்டு சினந்த சிவன் காமனைத் தன் நுதல்விழி நெருப்பால் எரித்தார் என்னும் செய்தியினையும், மேருமலையில் நான்முகனை குறித்து தவம் செய்து அழியாத ஆயுளையும் வலிமையையும் வேண்டிப்பெற்றவனும் யானைவடிவம் பொருந்தியவனுமான கயாசுரனை உக்கிரவடிவம் கொண்டு, திருவடிகளால் மிதித்து திருக்கரங்களால் அவனுடைய தோலை உரித்துப்போர்த்தார். இவ்வரலாற்றுச் செய்தியினையும் 'புரிசடை முடியின் மேலோர் பொருபுனற் கங்கை வைத்து கரியுரி போர்வையாகக் கருதிய காலகாலா'[1], 'வேழத்தின் உரிவை போர்த்து'[2], 'ஆனையின் உரிவை வைத்தார்'[3], 'யானையுரியை மூடினானை'[4], 'அத்தியின் உரிவை வைத்தாரையனை'[5], 'உரித்திட்டாராணையின் தோல்'[6], என்றும், 'அறுத்ததோர் கையுடையான் படைத்தான் தலையை'[7], 'தாமரையோன் சிரமரிந்து கையிற் கொண்டார் தலைதனிற் பலிகொண்டார்'[8] எனவரும் பாடல்களில் பிரமன் தலை கொய்த நிகழ்வுகளையும், 'தந்திரமறியாத் தக்கன் வேள்வியை தகர்த்து ஞான்று'[9], 'சாடவெடுத்தது தக்கன் தன் வேள்வி'[10] என தக்கனின் செருக்கறுத்தமை பற்றிய செய்திகளையும் கூறியுள்ளார். இவ்வாறு சிவனின் எட்டு வீரச்செயல்களையும் பதிவு செய்திருப்பதன் மூலம் சிவப்பெருமை, தலப் பெருமை என்பன கூறப்பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது.

இவரது பதிகங்களில் வரும் பத்தாவது பாடலில் தன்பிழைக்கு வருந்திய இராவணனுக்கு சிவன் அருட்பாலித்தமை பற்றிய செய்தியினை மிகநுட்பமாக பொருட்செறிவோடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண் கவர்ந்தான் எனும் இயல்பினால் இராவணனது பக்தியின் உயரிய திறன் மழுங்கடிக்கப்படினும், அவன் சிறந்த சிவபக்தன், சிவவழிபாட்டில் உயர்ந்தவன், சிவனருள் பெற்றவன் என்பதனை சமுதாயத்தவர்க்கு எடுத்துரைப்புச் செய்த நாவுக்கரசரின் நெறிப்படுத்தல் திறன் அவரைப் பயில்நிலை உளவியலாளராக முன்னிறுத்துகின்றது.

## நாயன்மார்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் தொன்மங்கள்

திருநாவுக்கரசர், நாயன்மார்களின் வரலாற்று நிகழ்வுகளையும் குறிப்பிட்டுப் பேசுகின்றார். திருஞான சம்பந்தர், அப்பூதியடிகள், சாக்கிய நாயனார், கண்ணப்ப நாயனார், கணம்புல்லர், சண்டேஸ்வரர், கோச்செங்கட்சோழ நாயனார், நமிநந்தியடிகள் முதலியோரது வரலாற்றுத் தொன்மங்களையும் பதிவு செய்திருக்கிறார். இவ்வாறான வரலாற்றுத் தொன்மங்களைக் குறிப்பட்ட காலச் சூழலில் அழுத்தியுரைப்பதானது அவர்களது வரலாற்றை மீட்டுருச் செய்வதற்கு மட்டுமன்றி மக்களை விழிப்பு நிலைக்குக் கொண்டுவரவும் உறுதுணை புரியும்.

பெரியபுராணத்தில் கூறப்பட்ட நாயன்மார்களின் சரித்திரங்கள் யாவும் சைவத்தமிழ் சமுதாயத்தை விளங்கிக் கொள்வதற்கான உண்மைச் சரித்திரங்கள். அவர்கள் குன்றாத உணர்வோடு இறையருள் வழிநின்று பெருவாழ்வெய்தியவர்கள். செயற்கரிய செயல்களால் தமிழ்ச் சமுதாயத்தில் இவர்களைப் பற்றிய கதையாடல்கள் மற்றும் அவை சார்ந்த எடுத்துரைப்புகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. இதனால் நாயன்மார்களே மூலப்படிவங்களாக ஆயினமையைத் தோத்திரப் பாடல்வழியறியலாம். சான்றாக,

*'காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர்*
*இறைச்சிப் பாரம்*
*தோற்பெருஞ் செருப்புந் தொட்டு*
*தூயவாய்க் கலசமாட்டி*
*தீப்பெறும் கண்கள் செய்யக் குருதிநீர் ஒழுகத் தங்கண்*
*கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை*
*வீரட்டனாரே'*

என திருக்குறுக்கை வீரட்டத்திருப்பதிகத்திலும்[11], மற்றும் திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகத்திலும்[12] கண்ணப்ப நாயனாரின் வரலாற்றினை மிகச்சுருக்கமாக குறிப்பிடுகின்றார். இவ்வாறே, சாக்கிய நாயனார்[13], நமிநந்தியடிகள்[14], அப்பூதியடிகள்[15], சண்டேசுரநாயனார்[16], கணம்புல்லர்[17], கோச்செங்கட் சோழன்[18] முதலியோர் குறித்த தொன்மங்களையும் எடுத்துரைத்துள்ளார். இவ்வாறு அப்பரடிகள் தனக்கு முன் வாழ்ந்த அல்லது சமகாலத்தில் வாழ்ந்த நாயன்மார்களின் ஆற்றல்கள், இறைவன் மீதான இடைவிடாத அன்பின் உறுதிப்பாடு என்பவற்றை தொன்மங்களாக வெளிப்படுத்தியிருக்கக் காணலாம்.

## திருத்தலங்களின் உருவாக்கம் குறித்த தொன்மங்கள்

கோயில்களின் உருவாக்கம் குறித்து பல்வேறு வகையிலான கதைகள் வழக்கத்திலிருந்து வருகின்றன. ஒவ்வொரு தலத்தினது உருவாக்கத்திலும் தொடர்புடைய நிகழ்வுகள் பற்றிய கதையாடல்கள் செவிவழிச் செய்தியாக இன்றும் பரிமாறப்பட்டு வருகின்றன. திருநாவுக்கரசர் இத்தகைய தொன்மங்களையும் பதிவுசெய்துள்ளார். திருவானைக்கா என்பது சிவத்தலங்களில் ஒன்று. சிவபெருமானை யானை ஒன்று வழிபட்டதனால் ஏற்பட்ட பெயரே இதுவாகும். திருவானைக்கா எனும் இடத்திலுள்ள இலிங்கத்தின் மீது சருகுகள் விழுந்து விடாமல் இருக்க சிலந்தி ஒன்று தன் உமிழ் நீரால் பந்தல் அமைத்து வழிபட்டது. அதனை தினந்தோறும் யானை ஒன்று அழித்து வந்தது. இச்செயலால் சினந்த சிலந்தி, யானையின் துதிக்கை வழியாகச் சென்று யானையையும் இறக்கச் செய்து தானும் இறந்தது. இறையருளால் சிலந்தி கோச்செங்கணான் என்ற பெயருடன் சோழர் குலத்தில் பிறந்தது. இவன் அரசாளுகையில் முன்னுணர்வு பெற்ற நிலையில் திருவானைக்காவில் மட்டுமன்றி வேறுபலவிடங்களிலும் கோயிலமைப்பித்தான். திருவானைக்காவில் தன்வாய் நூலினால் பந்தர்

செய்ய முரணிலாச் சிலந்தி தன்னை முடியுடை மன்னராக்கிய செய்தியினை,

> ***'சிலந்தியு மானைக்காவிற் றிருநிழற் பந்தர் செய்து***
> ***உலந்த வணிறந்த போதே கோச்செங்கணானுமாக***
> ***கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்***
> ***குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கைவீரட்டனாரே'***[19]

எனக் நாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார். திருவிராமேச்சுரம் மீதான பாடலில், 'திருமால் செய்கோயில்' என்று அக்கோயிலின் தொன்மையினைப் பாடல் முழுமையிலும் வெளிப்படுத்தியுள்ளமையுடன் அத்தலத்தினை நோக்கி மக்களை விரைந்துய்யுமாறு வழிப்படுத்தியுமுள்ளார்.

அட்டவீரட்டத்தலங்கள் உள்ளிட்ட சிவத்தலங்கள் எங்கும் யாத்திரைகளை மேற்கொண்ட நாவுக்கரசரின் பாடல்களில் அவற்றின் சிறப்புகள், ஆலயங்களுடன் தொடர்புடைய தொல்பழங்கதைகள், மற்றும் மூர்த்தி தல தீர்த்தப் பெருமைகள் என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வெடுத்துரைப்புகள் அவ்வத்தலங்கள் குறித்த தொன்மை, பெருமைகளை அறிய மூலங்களாக உள்ளன.

## தன்வரலாற்றைக் கூறும் தொன்மங்கள்

நாவுக்கரசரின் வரலாறு என்பதாகச் சேக்கிழாரால் பேசப்பட்டுள்ள விடயப்பரப்பு நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டது. முதலாவது அம்சம் அவர் சமண சமயம் சார்ந்து பின் மீட்சிபெற்ற வரலாறு. இரண்டாவது அம்சமாக அவரது ஊர்ப்பயணங்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் அமைகின்றன. அவர் மேற்கொண்ட உழவாரப்பணி மற்றும் அவர் புலப்படுத்திநின்ற பக்திநிலை என்பவற்றை முறையே மூன்றாவது நான்காவது அம்சங்களாகக் கொள்ளலாம்.[20] நாவுக்கரசர் சைவம் விடுத்து சமண சமயம் சார்ந்து வாழ்ந்தவர். சமணத்தில் தருமசேனராக திகழ்ந்த இவர், சைவத்துக்கு மீண்டு நாவுக்கரசரானமைக்குக் காரணமாக அமைந்தவர் திலகவதியாரே என சேக்கிழார் குறிப்பிடுகின்றார். திலகவதியாரின் வேண்டுதலை நிறைவு செய்யும் நோக்கில் சிவனே நாவுக்கரசருக்கு சூலைநோயைக் கொடுத்தார். இச்செய்தி தொடக்கம் திருக்கயிலைக் காட்சியைக் கண்டது ஈறாக நாவுக்கரசர் தன்வரலாற்றைப் பதிவுசெய்துள்ளார். அதாவது, சூலை நோயால் துன்புற்று ஆட்கொள்ளப்பெற்றமை, நாமார்க்கும் குடியல்லோம் என மன்னனை எதிர்த்தமை, நீற்றறையைக் குளிர்வித்தமை, மதம் கொண்ட யானையைப் பணிவித்தமை, கல் தெப்பமாக மிதந்தமை, பல்லவ மன்னனை சைவனாக மாற்றி குணபர ஈச்சரத்தை அமைப்பித்தமை, சூல இடபக் குறிகள் பெற்றமை, திருவடி தீட்சை பெற்றுக் கொண்டமை, பாடிப்படிக்காசு பெற்றமை, அப்பூதியடிகளைச் சந்தித்தமை, அவர் மகன் விடந்தீர்த்தமை, திருவாய்மூரிற் கண்ட காட்சி, பொதிசோறு பெற்றமை, சம்பந்தர் சந்திப்பு மற்றும் திருக்கயிலக்காட்சி என்றவாறாகத் தனது வாழ்வியலில் இடம்பெற்ற நிகழ்வுகளைத் தன்பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இக்குறிப்புகளின் வழிநின்று நாவுக்கரசரின்

வாழ்வியற் கோலங்களை அறியலாம். எனவே இவற்றை அவர் குறித்த தொன்மங்களாக இனங்காண இயலும். குறிப்பாக இவர் சமணம் சார்ந்து வாழ்ந்தமை பற்றிய நிகழ்வினை, 'குண்டராய்ச் சமணரோடே கூடிநான் கொண்ட மாலை'[21], 'தட்டிடுஞ் சமணரோடே தருக்கி நான் தவமென்றெண்ணி'[22], 'பாசிப்பன் மாசுமெய்யர் பலமிலாச் சமணரோடு நேசத்தால் இருந்த நெஞ்சை நீக்குமாறறிய மாட்டேன்'[23], 'பல்லுரைச் சமணரோடே பலபல காலமெல்லாம் சொல்லிய செலவு செய்தேன்'[24], 'எண்ணிலாச் சமணரோடே இசைந்தனை ஏழை நெஞ்சே'[25], ஓதுவித்தாய் அறவுரை காட்டி சமணரோடே'[26] என்னும் பாடல்களில் சமணருடன் இசைவுபெற்ற நினைவுகளை அவர் மீட்டுருச் செய்கிறார். இத்தகைய மீட்டுருவாக்கச் சிந்தனையில் அவரது களிவிரக்கமும் உணரப்படுகின்றது.

தருமசேனராக சமணத்தில் தலைமை பெற்றுத் திகழ்ந்தவர் சூலை நோய்காரணமாக மீண்டும் சைவத்துக்கு மீண்டார் எனக்கொள்வது நாவுக்கரசரின் சைவபக்தி சார் ஆளுமைக்கு நிறைவு தருவதாக அமையாது. ஏனெனில் அவரது தேவாரப் பதிகங்களை நோக்கும் போது சிவபக்தியில் அவருக்கிருந்த முனைப்பும், ஆழமும் அவரது வாழ்நாள் முழுவதுமான அனுபவத் தேட்டத்தின் பெறுபேறுகள் எனக் கருதத்தக்க வகையிலுள்ளன.[33]

## நிறைவாக

தொன்மங்களானவை மக்களின் எண்ணத்திலும் வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்தவல்லன. எனவே நாவுக்கரசரும் தொன்ம உத்திகள் மூலம் மக்களின் எண்ணங்களையும் வாழ்வியல் முறைகளையும் மாற்றியமைக்க முற்பட்டார். இராமாயண மகாபாரத இலக்கியங்களில் வரும் நிகழ்வுகள், பௌராணிக மரபுக் கதைகள் பலவும் இவரது பாடல்களில் இடம்பெற்றிருக்கின்றன. இவரது பாடல்களில் இறைபரத்துவம் குறித்த தொன்மங்களின் ஆதிக்கத்தை காணவியலும். சிவனின் அட்டவீரட்டச் செயல்களுள்ளிட்ட மறச்செயல்கள் குறித்த தொன்மங்களில் பௌராணிகக் கதைகளே அதிகம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இறைபரத்துவம், நாயன்மார்களின் செயற்கரிய ஆற்றல்கள், திருக்கோயில்கள் குறித்த கதைகள் என்பன குறித்த தொன்மங்களின் மீட்டுருவாக்கத்தில் திருநாவுக்கரசர் கொண்டிருந்த ஆர்வம் அதிகமாகும். அத்துடன் சைவபக்தி ஆளுமை குறித்த தன்வரலாறுகளையும் பதிவுசெய்துள்ளார். எனவே, திருநாவுக்கரசர் எந்தளவுக்குத் தொன்மங்களை எடுத்தாண்டு சைவபக்தி இலக்கிய உலகில் வெற்றிபெற்றிருக்கின்றார் என்பதனை அவரது பாடல்களை ஆராய்வோர் புரிந்து கொள்வர்.

## அடிக்குறிப்புகள்

1. மேலது, பா.எ. 4:63:6.
2. மேலது, பா.எ. 4:58:6.

3. மேலது, பா.எ. 4:30:1.
4. மேலது, பா.எ. 4:60:5.
5. மேலது, பா.எ. 4:38:7.
6. மேலது, பா.எ. 4:32:1.
7. மேலது, பா.எ. 4:93:3.
8. மேலது, பா.எ. 6.96.17.
9. மேலது, பா.எ. 4.65.5.
10. மேலது, பா.எ.4:81:10.
11. மேலது, பா.எ. 4:81:2,4.
12. மேலது, பா.எ. 4:49:7.
13. மேலது, பா.எ. 4:65:8.
14. மேலது, பா.எ. 4:49:6.
15. மேலது, பா.எ. 4:102:2,4.
16. மேலது, பா.எ. 4:12:10.
17. மேலது, பா.எ. 4:49:3, 4:65:6, 4:73:5.
18. மேலது, பா.எ. 4:49:9.
19. மேலது, பா.எ. 4:49.4.
20. மேலது, பா.எ. 4:49:4.
21. சுப்பிரமணியன், நா., 2002,**நால்வர் வாழ்வும் வாக்கும்**, ப.61.
22. அப்பர் தேவாரம், பா.எ. 4:39:1.
23. மேலது, பா.எ. 4:39:3.
24. மேலது, பா.எ. 4:39:4.
25. மேலது, பா.எ. 4:39:7.
26. மேலது, பா.எ. 4:39:8.
27. மேலது, பா.எ. 4:99:1.
28. சுப்பிரமணியன், நா., 2002,**மு.கு.நூ,** ப.63.